# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

**2023 ஆம் ஆண்டு மே மாதம் 26 ஆம் திகதிய**
**பகுதி II இற்குக் குறைநிரப்பி**

*(2023.05.29 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

## சேர்பெறுமதி வரி (திருத்தம்)

(தனியார் உறுப்பினர்களின் சட்டமூலம்)

***2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

*பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ இரான் விக்கிரமரத்ன அவர்களால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 10.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**சட்டப்பயன் பற்றிய கூற்று**

*அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளை பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டதன் மேல் மட்டுமே வலுவுக்குவரும் என்பதை உறுதிப்படுத்தும் வகையில் இச்சட்டமூலம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 2அ என்னும் பிரிவுமூலம் திருத்தப்படுமாக.*

## சேர்பெறுமதி வரி (திருத்தம்)

### 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயர்*

**1.** இச்சட்டம், 2023 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்கச் சட்டத்தின் 2அ என்னும் பிரிவைத் திருத்துதல்*

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தின் 2அ என்னும் பிரிவு, அதன் (2), (3), (4) மற்றும் (5) ஆம் உட்பிரிவுகளை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவுகளை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது; இவை, அதன் (2), (3) ஆம் உட்பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும்:-

> "(2) அத்தகைய ஒவ்வொரு கட்டளையும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன் அதன்பின்னர் வசதியானளவு விரைவாகப் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்துக்காக பாராளுமன்றத்தில் இடப்படுதலும் வேண்டும்.
>
> (3) அத்தகைய கட்டளை பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படுவதன்மேல் மட்டுமே வலுவுக்குவருதல் வேண்டும்.".

*ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

**3.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.